www.Padasalai.Net www.CBSEtips.in

Loyola

# ஈசி பொருளியல்

12

புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

Loyola
Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.245/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

ஆசிரியர்கள் :

திரு. **S. வேதமூர்த்தி** M.A., M.Ed., M.Phil.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
சொக்கலால் மேல்நிலைப்பள்ளி,
முக்கூடல்.

திரு. **K. முருகன்** M.A., M.Phil., B.Ed.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்
மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி,
மீனாட்சிபுரம், திருநெல்வேலி சந்திப்பு.

திரு. **V. சங்கர ராமன்** M.A., M.Ed., M.Sc., Yoga
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
தீர்த்தபதி மேல்நிலைப்பள்ளி,
அம்பாசமுத்திரம்.

திரு. **M. திருமலைநம்பி** M.A., M.Phil., B.Ed., PGD ELT
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி,
வடக்கு அரியநாயகிபுரம்.

திருமதி. **K. வித்யா**
முதுகலை பட்டதாரி

www.Padasalai.Net

Loyola Publications

## உங்களோடு உள்ளன்போடு

- அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே
- அறிவுசார் ஆசிரியப் பெருந்தகைகளே

**வணக்கமும், வாழ்த்துக்களும்**

- ஈசி பொருளியல் வழிகாட்டி வாயிலாக தங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.
- இவ்வழிகாட்டி 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முழு மதிப்பெண்கள் பெறும் வகையில் எளிய முறையில் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பகுதி வினாக்களுக்கும் உரிய விடைகள் மிகச்சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உங்களது படிப்பின் சிரமத்தை நிச்சயம் சரி செய்யும்.
- PTA வினாத்தாள் மற்றும் அரசு தேர்வு 2020 வினாக்களுக்குரிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- பொதுத்தேர்வின்போது வரைபட வினாக்களுக்கு கட்டாயம் பதில் எழுதவும்.
- ஓய்வுநேரங்களில்வரைபடம்,அட்டவணை,தலைப்புகள்,துணைத்தலைப்புகளை மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள்.
- உங்களது ஆசிரியரின் வழிகாட்டுதல், உங்களின் கடின உழைப்பு, பெற்றோரின் ஆசி, இந்த ஈசி பொருளியல் வழிகாட்டி மற்றும் இறையருள் உங்களுக்கு முழுமையாய் அமையப் பெற்று தேர்வில் முழு மதிப்பெண் பெற இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.
- இந்த வழிகாட்டி மென்மேலும் சிறக்க நல்லோர் அறிஞர்கள், ஆசிரியப் பெருந்தகையினரின் சீரிய கருத்துக்களை அன்புடன் வரவேற்கிறோம்.

நன்றி!

வாழ்க வளமுடன் ...

மேல் ஆய்வாளர்
**Dr. பி. மரிய ஆல்பர்ட்** M.A., M.Ed., M.Phil., Ph.D.,
முதுகலை பட்டதாரி பொருளியல் ஆசிரியர்,
தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை,2

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பேரியல் பொருளாதாரம் | 5 |
| 2 | நாட்டு வருமானம் | 21 |
| 3 | வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும் | 38 |
| 4 | நுகர்வு சார்பும் முதலீடு சார்பும் | 52 |
| 5 | பணவியல் பொருளியல் | 68 |
| 6 | வங்கியியல் | 85 |
| 7 | பன்னாட்டுப் பொருளியல் | 103 |
| 8 | பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள் | 122 |
| 9 | நிதிப் பொருளியல் | 136 |
| 10 | சுற்றுச்சூழல் பொருளியல் | 156 |
| 11 | பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும் | 174 |
| 12 | புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம் | 189 |
| | பெற்றோர் ஆசிரியர் கழகம் – மாதிரி வினாத்தாள் | 206 |
| | அரசு பொதுத் தேர்வு – மே 2022 | 224 |
| | அரசு துணைத்தேர்வு – ஆகஸ்ட் 2022 | 227 |
| | அரசு பொதுத் தேர்வு – மார்ச் 2023 | 230 |


www.Padasalai.Net

★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அத்தியாயம் 1

# பேரியல் பொருளாதாரம்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### பகுதி - அ

### I. சரியான விடையை தெரிவு செய்க

1. **பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை.** PTA - 6 மே 2022
   அ) சொத்தும் நலமும் ஆ) உற்பத்தியும் நுகர்வு
   இ) தேவையும் அளிப்பும் ஈ) நுண்ணியலும் மற்றும் பேரியலும்
   **விடை : ஈ) நுண்ணியலும் மற்றும் பேரியலும்**

2. **"மேக்ரே" (Macro) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?** QY - 2019
   அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்சு
   இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு
   **விடை : இ) ராக்னர் பிரிக்சு**

3. **"புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?** GMQ -19, MAR -20, SEP -20
   அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்சு
   இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு
   **விடை : ஆ) ஜே.எம்.கீன்சு**

4. **பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?** PTA - 1 ஆகஸ்ட் 2022 மார்ச் 2023
   அ) விலை கோட்பாடு ஆ) வருவாய் கோட்பாடு
   இ) அங்காடி கோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு
   **விடை : ஆ) வருவாய் கோட்பாடு**

5. **பேரியல் பொருளாதாரம் ஆய்வது** PTA -2, MAR- 2020
   அ) தனிமனிதர்களை ஆ) நிறுவனங்களை
   இ) நாடுகளை ஈ) ஒட்டு மொத்தங்களை
   **விடை : ஈ) ஒட்டு மொத்தங்களை**

6. **ஜே.எம்.கீன்சின் பங்களிப்பைக் குறிப்பிடுக.** மே 2022
   அ) நாடுகளின் செல்வம் ஆ) பொதுக் கோட்பாடு
   இ) மூலதனம் ஈ) பொது நிதி
   **விடை : ஆ) பொதுக் கோட்பாடு**

7. **பொதுமட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து __________ ஆகும்.**
   அ) மொத்த விலைக் குறியீடு ஆ) வாணிகச் சுழல்
   இ) பண வீக்கம் ஈ) நாட்டு வருமானம்
   **விடை : இ) பண வீக்கம்**

8. **பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.** PTA - 5
   அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது ஆ) தடைகளை முறியடிப்பது
   இ) வளர்ச்சியை அடைவது ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
   **விடை : ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



9. **ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**
அ) உற்பத்தியும் பகிர்வும் ஆ) உற்பத்தியும் பரிமாற்றமும்
இ) உற்பத்தியும் நுகர்வும் ஈ) உற்பத்தியும் சந்தையிடுகையும்
**விடை : இ) உற்பத்தியும் நுகர்வும்**

10. **ஒரு பொருளாதாரத்தில் காணப்படுவது.** HY -2019, PTA -4
அ) உற்பத்தி துறை ஆ) நுகர்வு துறை
இ) அரசு துறை ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்
**விடை : ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்**

11. **எந்த பொருளாதாரத்தில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?**
அ) முதலாளித்துவப் பொருளாதாரம் ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) உலகமய அமைப்பு ஈ) கலப்புப் பொருளாதாரம்
**விடை : அ) முதலாளித்துவப் பொருளாதாரம்**

12. **பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு _________ ஆகும்.**
அ) முதலாளித்துவ அமைப்பு ஆ) உலகமயத்துவ அமைப்பு
இ) கலப்புப் பொருளாதாரம் ஈ) சமதருமப் பொருளாதாரம்
**விடை : ஈ) சமதருமப் பொருளாதாரம்**

13. **முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?**
அ) ஆடம்ஸ்மித் ஆ) காரல் மார்க்ஸ்
இ) தக்கேரி ஈ) ஜே.எம்.கீன்ஸ் **விடை : அ) ஆடம்ஸ்மித்**

14. **முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _________ ஆகும்.** AUG - 2021, PTA -3 மார்ச் 2023
அ) இரஷ்யா ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா **விடை : ஆ) அமெரிக்கா**

15. **சமதருமக் கொள்கையின் தந்தை எனப்படுபவர் யார்?** PTA -1 , HY - 2019, AUG -2021
அ) ஜே.எம்.கீன்சு ஆ) காரல் மார்க்சு
இ) ஆடம்ஸ்மித் ஈ) சாமுவேல்சன் **விடை : ஆ) காரல் மார்க்சு**

16. **தனியாரும் அரசும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பைக் குறிப்பிடும் பதம் _________ ஆகும்.** PTA - 6 ஆகஸ்ட் 2022
அ) முதலாளித்துவப் பொருளாதாரம் ஆ) சமதருமப் பொருளாதாரம்
இ) உலகமயத்துவ பொருளாதாரம் ஈ) கலப்புப் பொருளாதாரம்
**விடை : ஈ) கலப்புப் பொருளாதாரம்**

17. **ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவைக் குறிப்பிடும் பதம் _________ ஆகும்.**
அ) உற்பத்தி ஆ) இருப்பு இ) மாறிலி ஈ) ஓட்டம் **விடை : ஆ) இருப்பு**

18. **கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியைக் கண்டுபிடி.** QY - 2019
அ) பண அளிப்பு ஆ) சொத்துக்கள்
இ) வருமானம் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு **விடை : இ) வருமானம்**

19. **இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளைக் குறிப்பிடுக.** PTA - 4
அ) குடும்பங்களும் நிறுவனங்களும்
ஆ) தனியாரும் பொதுத்துறையும்
இ) உள்நாட்டு, வெளிநாட்டுத்துறைகள்
ஈ) நிறுவனங்களும் அரசும் **விடை : அ) குடும்பங்களும் நிறுவனங்களும்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



20. **திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது____ ஆகும்.** **PTA - 2**

அ) இரு துறை மாதிரி ஆ) முத்துறை மாதிரி

இ) நான்கு துறை மாதிரி ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

**விடை : இ) நான்கு துறை மாதிரி**

## பகுதி - ஆ

## II. கீழ்க்காண்பவற்றுக்கு ஓரிரு சொற்களில் விடையளி

21. **பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.** **QY -2019, PTA -4** **மே 2022**

பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது,

22. **பணவீக்கம் எனும் பதத்தின் பொருள் தருக.** **QY - 2019, GMQ 2019, MAR- 2020**

பணவீக்கம் என்பது பணத்தின் மதிப்பு குறைவதும், பொருட்களின் விலைகள் உயர்ந்து கொண்டே செல்வதைக் குறிப்பதாகும்.

23. **"பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?** **HY -2019, PTA -1, 5**

"மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்து கொள்ளும் முறையை குறிப்பது பொருளாதாரம் ஆகும்"- - A.J பிரவுன்

24. **வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

25. **முதலாளித்துவம் என்றால் என்ன?** **HY -2019**


பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் காணப்படும். முதலாளித்துவ நாட்டிற்கு உதாரணம்: அமெரிக்க ஐக்கிய நாடு (USA)

26. **பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.** **PTA - 6** **மார்ச் 2023**

1. பொருளாதார மாதிரி என்பது உண்மையான சூழலை விளக்குவது.
2. பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகின்றது.
3. கணிதம், வரைபடம், சமன்பாடு போன்ற பொருளாதார மாறிலிகளின் உறவை எளிய முறையில் விளக்குகின்றது.

27. **"வருமான சுழல் ஓட்டம்" - வரையறு.** **PTA - 2 & 3**

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள உறவினையும், தொடர்பினையும் விளக்குவது வருமான வட்ட ஓட்டம் எனப்படும்.






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - இ

### III. கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக

**28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.** PTA - 5, MAR- 2020

1. பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அதற்கு தேவையான யுக்திகளைக் கண்டு தீர்வு காணவும் உதவுகின்றது.
2. எதிர்கால பிரச்சினைகளை தெரிந்து கொள்ளவும், அதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகின்றது.
3. நடப்பு பிரச்சினைகளை அறிவியல்பூர்வமாக தீர்வு காண உதவுகின்றது.
4. பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை முன்கூட்டியே அறியவும் உதவுகின்றது.

**29. பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.** QY -2019 மே 2022

1. **வளர்ச்சி நிலை:** வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.
2. **நடவடிக்கைகளின் முறை:** முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.
3. **நடவடிக்கைகளின் அளவு:** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.
4. **செயல்படும் தன்மை:** நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.
5. **செயல் பரப்பு தன்மை:** மூடிய மற்றும் திறந்தவெளி பொருளாதார அமைப்புகள்
6. **முன்னேற்ற தன்மை:** பழமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்
7. **தேசிய வருவாய் அளவு:** குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

**30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.** PTA 6 - ஆகஸ்ட் 2021 ஆகஸ்ட் 2022

1. **தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரை சட்டம்:** முதலாளித்துவத்தின் அனைத்து வளங்களும் தனி நபர்களுக்கு சொந்தமானது. உரிமையாளர்கள் இறப்பிற்கு பின் அவர்களின் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.
2. **தேர்வு செய்வதில் (தெரிந்தெடுப்பதில்) சுதந்திரம்:** தனி நபர் உரிமையான பொருளை உற்பத்தி செய்யவும், வியாபார இடத்தை தெரிவு செய்யவும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர்.
3. **இலாப நோக்கம்:** உற்பத்தியாளர்கள் பின்பற்றுகின்ற "தங்க விதி"யான உச்ச லாபம் அடைவதில் முழு நோக்கமாக இருப்பர்.
4. **போட்டியிடும் சுதந்திரம்:** லாப நோக்கில் உற்பத்தி அமைவதால், சந்தையில் போட்டி அதிகமாகவும், சுதந்திரமாகவும் காணப்படும்.
5. **விலை இயங்குமுறை:** விலை முதலாளித்துவத்தின் இதயமாகும். தேவை மற்றும் அளிப்பு மூலம் விலையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர்.
6. **அரசின் பங்கு:** அடிப்படை பிரச்சினைகளை மட்டும் கவனிப்பதில் அரசின் பங்கு பொருளாதாரத்தில் குறைவு.
7. **வருமான ஏற்றத்தாழ்வு:** ஏழை, பணக்காரன், இருப்பவர், இல்லாதவர் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படும்.

**31. சமதரும குறைகளைக் கூறுக.** PTA - 1 மார்ச் 2023

1. **சிவப்பு நாடா நிலை:** அனைத்து அதிகாரங்களும் அரசாங்கத்திடம் இருப்பதால், அரசாங்க நடவடிக்கைகள் நடைபெறுவதில் கால தாமதமும், சிவப்பு நாடா நிலை அமைய காரணமாகும்.
2. **ஊக்கமின்மை:** திறமைக்கு எந்த ஊக்கமும் அளிக்க வாய்ப்பு இல்லை.
3. **தெரிவு செய்வதில் சுதந்திரக் குறைவு:** பண்டங்கள் மற்றும் பணிகள் தேர்வு செய்வதில் சுதந்திரம் கிடையாது.
4. **அதிகாரம் குவிதல்:** அனைத்து முடிவுகளும் அரசாங்கம் எடுப்பதால் பொருளாதாரத்தில் உற்பத்தி பாதிப்பு ஏற்படும். மேலும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**32. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக:** **PTA - 2, செப் 2020**


1. **சொத்து உற்பத்தி சாதனங்களின் உரிமம்:** உற்பத்தி காரணிகள் தனியார் மற்றும் அரசாங்கம் இரண்டிற்கும் சொந்தமாக இருப்பதால் உரிமை கொள்ள வாய்ப்பு உள்ளது.
2. **பொதுத்துறை மற்றும் தனியார் துறை இணைவு:** தனியார் இலாப நோக்குடனும், பொதுத்துறை சமூக நல நோக்குடனும் செயல்படுவதால் பொருளாதாரம் சீரான நிலையில் காணப்படும்.
3. **பொருளாதாரத் திட்டமிடல்:** பொதுவாக அனைத்து திட்டங்களும் வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், முன்னுரிமைகள், இலக்குகள் அடிப்படையில் எல்லா துறைகளும் செயல்படும்.
4. **பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு:** பொருளாதார அடிப்படை பிரச்சினைகளை விலை இயங்குமுறை, அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
5. **சுதந்திரமும், கட்டுப்பாடும்:** தனியார் சுதந்திரமாக உற்பத்தியில் ஈடுபட்டாலும், ஒட்டுமொத்த கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.

**33. முதலாளித்துவத்தையும் சமத்துவத்தையும் வேறுபடுத்துக.** **MAR -2020**

| | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை தனியார் வசம் உள்ளது. | உற்பத்தி மூலங்களின் உரிமை அரசாங்கத்திடம் உள்ளது. |
| 2 | பொருளாதார நோக்கம் லாப நோக்கமாக காணப்படும். | சமூக நலன் கொண்டு செயல்படும். |
| 3 | தடையில்லா சந்தை முறை அங்காடி காணப்படும். | மத்திய திட்டக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் செயல்படும். |
| 4 | அரசின் பங்கு குறைவு. கட்டுப்பாடும் அதிக அளவு காணப்படும். | அரசாங்கம் முழு ஈடுபாடு கொண்டு உற்பத்தியில் செயல்படும். |
| 5 | சமனற்ற நிலையில் வருவாய் காணப்படும். | வருவாய் சமநிலையில் காணப்படும். |

**34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.** **மே 2022**

இதில் இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டும் காணப்படும்.




1. **இல்லத்துறை:** இத்துறையில் அனைத்து வருவாயையும், நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தப்படுகிறது.
2. **நிறுவனத்துறை:** இத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகிறது.

$Y = C + I$ y என்பது வருவாய்; C என்பது நுகர்வு; I என்பது முதலீடு

**பகுதி – ஈ**

## IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி

**35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.** **PTA -1, QY - 2019**

பேரியல் பொருளாதாரம் மிக பெரியதாகவும், முக்கிய பகுதிகளை உடையதாகவும் காணப்படும்.

1. **தேசிய வருவாய்:** தேசிய வருவாய் என்பது பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சமாகும். நாட்டின் வருவாய் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி நிலையை நீண்ட காலத்தில் விளக்குவதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **பண வீக்கம்:** பண வீக்கம் என்பது விலையின் உயர்வை உணர்த்துவதாகும். மொத்த விலை குறியீட்டெண் நுகர்வோர் குறியீட்டெண் இரண்டும் மொத்த விலை அளவை மதிப்பிட அவசியமான ஒன்றாகும்.
3. **வாணிப சுழற்சி:** வாணிப சுழற்சி என்பது வாணிபத்தில் ஏற்படும் மாற்றங்களை விளக்குவது. செழிப்பு, மந்தம், மீட்பு என பொருளியலின் ஏற்ற இறக்கத்தை உணர முடியும்.
4. **வறுமை மற்றும் வேலையின்மை:** வறுமை மற்றும் வேலையின்மை எல்லா நாடுகளிலும் காணப்படும் மிகப்பெரிய பிரச்சனையாகும். அதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்து சரியான நடவடிக்கையை மேற்கொள்ள பேரியல் உதவுகிறது.
5. **பொருளாதார வளர்ச்சி:** பேரியல் பகுத்தாய்வின் மூலம்தான் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதனை தீர்மானிக்கும் காரணிகளை புரிந்து கொள்ள முடியும்.
6. **பொருளாதார கொள்கைகள்:** பொருளாதார கொள்கைகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது. அடிப்படை பிரச்சனைகளை தீர்வு காணவும், வளர்ச்சி தடைகளை நீக்கவும் பேரியல் உதவுகிறது.

**36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**

**PTA - 2 & 5, GMQ 2019** **ஆகஸ்ட் 2022**

பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ அல்லது பகுதியையோ குறிப்பதாகும்.

1. **வளர்ச்சி நிலை:** மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பதாகும். பொருளாதார பணிகள் அல்லது நடவடிக்கை எவ்வாறு செயல்படுகின்றது என்பதை விளக்குவது வளர்ச்சி நிலையாகும்.
2. **உற்பத்தி நடவடிக்கை:** பொருளாதார வளர்ச்சி நடவடிக்கையில் உற்பத்தி மிகவும் அவசியமானது. இது பல்வேறு பொருளாதார செயல்பாட்டிற்கு அவசியமானது.
3. **நுகர்வு நடவடிக்கை:** உற்பத்தியைப் போன்று நுகர்வும் பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை அம்சமாகும். நுகர்வு பொருளாதார வளர்ச்சி நிலையை காட்டுவது. மேலும் உற்பத்தியை தூண்டுவது ஆகும்.
4. **பகிர்வு நடவடிக்கை:** உற்பத்தி நடவடிக்கை மற்றும் நுகர்வு நடவடிக்கை இரண்டும் செயல்பட உதவுவது பகிர்வு நடவடிக்கையாகும். பகிர்வு என்பது பொருளாதாரம் மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதுகாக்கப்படுகின்றது.
5. **பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகள்:** போக்குவரத்து, வங்கி பணி, விளம்பரம் திட்டமிடல், அரசின் கொள்கைகள் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை நெறிப்படுத்துதல் போன்றவை பொருளாதாரமற்ற நடவடிக்கைகள் ஆகும்.
6. **வெளிப்புற நடவடிக்கைகள்:** ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மாற்று வருவாய் போன்றவை வெளிப்புற நடவடிக்கைகள் ஆகும்.

**37. முதலாளித்துவம், சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.**

**PTA - 3, 4 & 6** **MAR -2020, SEP - 2020, AUG - 2021**

| | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| 1 | உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகியவற்றின் உரிமை தனியார் வசம் காணப்படும் | உற்பத்தி காரணிகளின் உரிமை அனைத்தும் அரசு தன் கைவசம் வைத்துக் கொள்ளும். |
| 2 | முதலாளித்துவத்தில் இலாபம் என்பது உச்ச நிலையை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | சமத்துவத்தில் சமூக நலன் கொண்டு செயல்படுவதால் இயல்பு லாபம் மட்டும் அடைவார்கள். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| 3 | எப்போதும் முதலாளித்துவத்தின் மையப் பிரச்சனையாக காணப்படுவது தடையில்லா வாணிப முறையாகும். | மத்திய திட்டக்குழு பரிந்துரையின் அடிப்படையில் பிரச்சனைகள் தீர்வு செய்யப்படும். |
| 4 | உள்ளீடுகளை கட்டுப்படுத்துவது மட்டும் அரசின் பங்காக காணப்படும். | முழு ஈடுபாடு கொண்டு அரசு செயல்படும். |
| 5 | சமனற்ற நிலையில் வருவாய் பங்கீடு அமையும். | சம நிலையில் வருவாய் பங்கீடு காணப்படும். |
| 6 | தனியார் நிறுவனமாக செயல்படும். | அரசு நிறுவனமாக செயல்படும். |
| 7 | முழுமையான பொருளாதார சுதந்திரம் காணப்படும். | பொருளாதாரத்தில் சுதந்திரம் காணப்படாது. அரசு தலையீடு காணப்படும். |

**38. முதலாளித்துவம், சமதருமம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**

மே 2022 மார்ச் 2023

| | தன்மைகள் | முதலாளித்துவம் | சமதருமம் | கலப்புப் பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை. | தனியார் வசம் உள்ளது. | பொது துறை உரிமை | தனியார் மற்றும் பொது துறை உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | லாபத்தின் உச்ச நோக்கம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3 | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டக்குழு முறை | மத்திய திட்டக்குழு முறை மற்றும் தடையில்லா சந்தை முறை |
| 4 | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழுமையான உற்பத்தி கட்டுப்பாடு | குறைவான பங்கு |
| 5 | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை பங்கீடு | சமநிலை பங்கீடு | குறையாத சம நிலையற்ற நிலை பங்கீடு |
| 6 | நிறுவன தன்மை | தனியார் நிறுவனமாகும் | அரசு நிறுவனம் ஆகும் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் இணைந்து காணப்படுவது |
| 7 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் காணப்படும் | சுதந்திரமின்மை காணப்படும் | கட்டுப்பாடுகளுடன் கூடிய சுதந்திரம் காணப்படும் |
| 8 | முக்கிய பிரச்சனையாக காணப்படுவது | சமமின்மை நிலை காணப்படும் | திறனின்மை நிலை காணப்படும் | சமமின்மை மற்றும் திறனின்மை நிலை காணப்படும் |

## பகுதி II - PTA, GMQ, அரசு தேர்வு வினா விடைகள்

### I. கூற்று மற்றும் காரணம்

**1.** i) நவீன நுண்ணியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார். **PTA - 5**

ii) நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ் ஆவார்.

அ) i மற்றும் ii சரியானது ஆ) i மற்றும் ii தவறானது

இ) i சரியானது ஆனால் ii தவறானது ஈ) i தவறானது ஆனால் ii சரியானது

**விடை : ஈ) i தவறானது ஆனால் ii சரியானது**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## II. குறு & சிறு வினாக்கள்

**1. பேரியல் பொருளாதாரத்தின் குறைபாடுகள் யாவை?** **GMQ - 2019**


1. பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி, பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.
2. எல்லா நிறுவனங்களும் ஒரே தன்மை உடையது என்ற எடுகோளைக் கொண்டது.
3. தொகுத்தாய்வு முறை மேற்கொள்ளும் போது தவறு காணப்பட வாய்ப்பு உள்ளது. எல்லா நாட்டிற்கும் பொருந்துவது இல்லை.
4. பொருளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கின்றன.

**2. முதலாளித்துவம் மற்றும் உலகத்துவம் - வேறுபடுத்துக.** **PTA - 4**

| | முதலாளித்துவம் | உலகத்துவம் |
|---|---|---|
| 1. | பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் உள்ள அமைப்பே முதலாளித்துவம் ஆகும் | பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர்நோக்கும் புதிய அங்காடி தத்துவமே உலகத்துவம் ஆகும். |
| 2. | முதலாளித்துவத்தின் தந்தை ஆடம்ஸ்மித் ஆவார் | உலகத்துவம் என்ற பதத்தை உருவாக்கியவர் மேன் பிரட்-டி-ஸ்டீகர் |
| 3. | இதுதடையில்லாபொருளாதாரம்என்றும்சந்தைப் பொருளாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது. | இந்த தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்று குறிப்பிடப்படுகின்றது. |

## III. பெரு வினாக்கள்

**1. நான்கு துறை பொருளாதாரத்தில் வருமான வட்ட ஓட்டத்தினை வரைபடத்துடன் விளக்குக.** **QY - 2019, PTA - 3**






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




1. நான்கு துறை பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது
2. நிஜ வாழ்க்கையில் நான்கு துறை பொருளாதாரம் காணப்படுகிறது.
3. இந்த மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.
   i) இல்லங்கள் ii) நிறுவனங்கள் iii) அரசு iv) வெளியுறவுத்துறை
4. வெளியுறவுத்துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள்.
5. நான்கு துறை பொருளாதாரத்தில் ஒட்டு மொத்த செலவானது.
   $y = C + I + G + (X - M)$

**2. மூன்று துறை சூழல் ஓட்ட மாதிரியினை விரிவாக விளக்குக** **செப் -2020** **மே 2022**

இல்லம் மற்றும் நிறுவனத்துறைக்கு மேலாக அரசுத்துறை சேரும்போது மூன்று துறை மாதிரி (Three Sector Model) அமைகிறது. அரசானது இல்லத்துறை மற்றும் நிறுவனங்களில் வரி விதிக்கின்றனர். நிறுவனங்களிலிருந்து பொருள் மற்றும் பணிகளை வாங்குகின்றன. மேலும், இல்லத்துறையிலிருந்து உற்பத்தி காரணிகளையும் பெறுகின்றன. இதற்கு மாறாக, அரசானது ஓய்வு ஊதியம், நஷ்ட ஈடு, மானியம் ஆகிய சமூக பரிவர்த்தனைகளை இல்லங்களுக்கு வழங்குகிறது. அது போல, நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பொருள் மற்றும் பணிகளுக்கு பணமளிக்கிறது. மூன்று துறை பொருளாதார மாதிரியை வரைபடம் விளக்குகிறது.

**மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்**




மூன்று துறை மாதிரியில், தேசிய வருமானம் (National Income) என்பது நுகர்வுச் செலவு (Consumption) முதலீட்டு செலவு (Investment Expenditure) மற்றும் அரசின் செலவு (Government Expenditure) ஆகியவற்றை கூட்டுவதால் அடையலாம்.

$$Y = C + I + G$$

இங்கு

$Y$ = வருவாய்; $C$ = நுகர்வு செலவு; $I$ = முதலீட்டு செலவு; $G$ = அரசின் செலவு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பகுதி III - கூடுதல் வினாக்கள்

## I. பொருத்துக

1.

| | | | |
|---|---|---|---|
| A | நுண்ணியல் | 1 | J.M.கீன்ஸ் |
| B | பேரியல் | 2 | நுண்ணியல் பொருளியல் |
| C | நாட்டு வருமானம் | 3 | ராக்னர் பிரிஷ் |
| D | தனிநபர் வருமானம் | 4 | பேரியல் பொருளியல் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

**விடை : ஆ) (A) 3 ; (B) 1 ; (C) 4 ; (D) 2**

2.

| | | | |
|---|---|---|---|
| A | பேரியல் பொருளியல் | 1 | தேசிய கணக்குகள் |
| B | நுண்ணிய பொருளியல் | 2 | மந்த நிலை |
| C | வாணிப சுழற்சி | 3 | வருவாய் கோட்பாடு |
| D | வருவாயின் வட்ட ஓட்டம் | 4 | விலை கோட்பாடு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 3 | 4 |
| ஆ) | 1 | 2 | 4 | 3 |
| இ) | 3 | 2 | 4 | 1 |
| ஈ) | 3 | 4 | 2 | 1 |

**விடை : ஈ) (A) 3 ; (B) 4 ; (C) 2 ; (D) 1**

3.

| | | | |
|---|---|---|---|
| A | முதலாளித்துவம் | 1 | வடகொரியா |
| B | பொதுவுடைமை | 2 | அமெரிக்கா |
| C | சமத்துவ சார்பு | 3 | இந்தியா |
| D | கலப்புப் பொருளாதாரம் | 4 | சீனா |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 1 | 3 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

**விடை : அ) (A) 2 ; (B) 4 ; (C) 1 ; (D) 3**

## II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. **பண வீக்கம் என்பது**
   - அ) விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு அதிகரிப்பது
   - ஆ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு குறைவது
   - இ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு அதிகரிப்பது
   - ஈ) மேற்கூறிய அனைத்தும் **விடை : ஆ) விலைகள் அதிகரித்து பணத்தின் மதிப்பு குறைவது**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை உருவாக்கியவர்**

அ) ஏ.ஜெ.பிரவுன் ஆ) மேன் பிரட்டிஸ்டீகர்

இ) J.R.ஹிக்ஸ் ஈ) J.M.கீன்ஸ் **விடை : ஆ) மேன் பிரட்டிஸ்டீகர்**

**3. முதலாளித்துவ பொருளாதாரத்தின் அடிப்படை நோக்கம்**

அ) சமூக நலன் ஆ) பொதுவுடமை

இ) இலாபம் ஈ) தனியார் சுதந்திரம் **விடை : இ) இலாபம்**

**4. கலப்பு பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள்**

அ) இந்தியா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ்

ஆ) இங்கிலாந்து, சீனா, ரஷ்யா, பிரேசில்

இ) இந்தியா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ்

ஈ) இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில் **விடை : ஈ) இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில்**

**5. வறுமை & வேலையின்மைக்கு தீர்வு**

அ) வளங்களை ஒதுக்கீடு செய்தல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ஆ) பகிர்வை தீர்மானித்தல், அரசின் பங்கை அதிகரித்தல்

இ) உற்பத்தியை அதிகரித்தல், முதலீட்டை அதிகரித்தல்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : அ) வளங்களை ஒதுக்கீடு செய்தல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

**6. பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு**

அ) நுண்ணியல் பொருளாதாரம் ஆ) சமவுடமை பொருளாதாரம்

இ) கலப்பு பொருளாதாரம் ஈ) பேரியல் பொருளாதாரம்

**விடை : இ) கலப்பு பொருளாதாரம்**

**7. பொருளாதார அமைப்பு முறைகள்**

அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 2 **விடை : இ) 3**

**8. முக்கிய பொருளாதார அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் ________ வருவாயின் வட்ட ஓட்ட மாதிரிகள்.**

அ) 4 ஆ) 3 இ) 5 ஈ) 2 **விடை : ஆ) 3**

**9. பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு முறை**

அ) 3 ஆ) 5 இ) 2 ஈ) 4 **விடை : அ) 3**

**10. நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் ஓட்டம்**

அ) $y = C + I + G + (X / M)$ ஆ) $y = C + I + G + (X - M)$

இ) $y = C + I + G + (X + M)$ ஈ) $y = C + I + G + (X \times M)$

**விடை : ஆ) $y = C + I + G + (X - M)$**

## III. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) பேரியல் பொருளியலின் தந்தை - ஆதம் ஸ்மித்

ஆ) சமத்துவத்தின் தந்தை - J.M.கீன்ஸ்

இ) விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் - மேன்பிரட்.டி.ஸ்டீகர்

ஈ) முதலாளித்துவத்தின் தந்தை - கார்ல் மார்க்ஸ்

**விடை : இ) விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம்-மேன்பிரட்.டி.ஸ்டீகர்**

2. அ) முதலாளித்துவ பொருளாதாரம் - வெளிநாட்டு மாற்று இருப்பு

ஆ) சமத்துவப் பொருளாதாரம் - சந்தைப் பொருளாதாரம்

இ) இருப்பு மாறிலி - கட்டளைப் பொருளாதாரம்

ஈ) ஓட்ட மாறிலி - நுகர்வு **விடை : ஈ) ஓட்ட மாறிலி-நுகர்வு**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. அ) Y - அரசு
ஆ) C - நுகர்வு
இ) I - வருமானம்
ஈ) G - முதலீடு

**விடை : ஆ) C–நுகர்வு**

## IV. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) இரு துறை பொருளாதாரம் - $Y = C + G$
ஆ) மூன்று துறை பொருளாதாரம் - $Y = C + I + G$
இ) நான்கு துறை பொருளாதாரம் - $Y = C + I + G + (X – M)$
ஈ) சமத்துவப் பொருளாதாரம் - திட்டமிட்ட பொருளாதாரம்

**விடை : அ) இருதுறை பொருளாதாரம்-$Y = C + G$**

2. அ) முதலாளித்துவ பொருளாதாரம் - U.S.A, மேற்கு ஜெர்மனி
ஆ) சமத்துவப் பொருளாதாரம் - ஆஸ்திரேலியா, ஜப்பான்
இ) கலப்பு பொருளாதாரம் - பிரான்சு, பிரேசில்
ஈ) உலகத்துவம் - பன்னாட்டு வணிகம்

**விடை : இ) கலப்பு பொருளாதாரம் – பிரான்சு, பிரேசில்**

3. அ) சிகப்பு நாடா முறை - தலையிடாக் கொள்கை பொருளாதாரம்
ஆ) அதிகார வர்க்கம் - சமத்துவப் பொருளாதாரம்
இ) இலாப நோக்கம் - முதலாளித்துவம்
ஈ) பழக்க வழக்கங்கள் - பழமை பொருளாதாரம்

**விடை : அ) சிகப்பு நாடா முறை-தலையிடாக் கொள்கை பொருளாதாரம்**

## V. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) பொருளாதாரத்தில் முதல் நோபல் பரிசு J.M.கீன்சு அவர்களுக்கு வழங்கப்பட்டது.
ஆ) வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக்கோட்பாடு என்ற நூலை எழுதியவர் ராக்னர் ஃபிரிஸ்ச்.
இ) நுண்ணியல் பொருளாதாரம் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் பற்றியதாகும்.
ஈ) பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலை வாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது.

**விடை : ஈ) பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலை வாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது.**

2. அ) “நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு” - A.J.பிரவுன்
ஆ) பொருளாதார அமைப்பு என்பது “மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பது” - J.R.ஹிக்ஸ்
இ) பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.
ஈ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கும்.

**விடை : இ) பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VI. தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) சமத்துவ பொருளாதாரத்தில் வருவாய் மற்றும் செல்வம் பகிர்தலில் சமத்துவம் மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகிறது.
ஆ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி வளங்கள் தனியார் மற்றும் அரசிடம் இருக்கும்.
இ) இருப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கணக்கிடப்படும் பொருட்களின் அளவினைக் குறிப்பதாகும்.
ஈ) ஓட்டம் என்பவை ஒரு குறிப்பிட்ட காலகட்ட அளவில் கணக்கிடப்படுபவையாகும்.
**விடை : ஆ) முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி வளங்கள் தனியார் மற்றும் அரசிடம் இருக்கும்.**

2. அ) ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்திற்கும் பல்வேறு நாடுகளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.
ஆ) இரண்டு துறை மாதிரி என்பது இல்லங்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்ட எளிய பொருளாதாரம்.
இ) மூன்று துறை மாதிரி கலப்பு மற்றும் மூடிய பொருளாதாரத்திற்குரியது.
ஈ) நான்கு துறை மாதிரி திறந்த பொருளாதார அமைப்புக்குரியதாகும்.
**விடை : அ) ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்திற்கும் பல்வேறு நாடுகளுக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.**

## VII. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்

1. அ) இல்லங்கள் ஆ) நிறுவனங்கள் இ) அரசு ஈ) உள் துறை **விடை : ஈ) உள்துறை**

2. அ) பழமை பொருளாதாரம் ஆ) சமத்துவப் பொருளாதாரம்
இ) உலகத்துவம் ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்
**விடை : இ) உலகத்துவம்**

3. அ) செழிப்பு ஆ) நீட்சி இ) பின்னறக்கம் ஈ) மந்த நிலை
**விடை : ஆ) நீட்சி**

## VIII. கூற்று-காரணம் கண்டறிந்து சரியான விடையைத் தேர்ந்தெடு

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று (A) சரி, காரணம் (R) தவறு. ஈ) கூற்று (A), காரணம் (R) இரண்டும் தவறு.

1. **கூற்று (A)** : முதலாளித்துவ பொருளாதாரத்தில், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும்.
**காரணம் (R)** : முதலாளித்துவத்தில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற தங்க விதி "உச்ச இலாபம்" அடைதல்
**விடை : அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.**

2. **கூற்று (A)** : சமத்துவப் பொருளாதாரத்தில் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கிப் பயன்படுத்தும்.
**காரணம் (R)** : சமத்துவப் பொருளாதார அமைப்பில் பொது நலமே அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும்.
**விடை : அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமாகும்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. ஓரிரு வார்த்தையில் விடையளி

**1. பொருளியலின் இரண்டு பிரிவுகள் யாவை?**

1. நுண்ணியியல் பொருளாதாரம்
2. பேரியல் பொருளாதாரம் என இரு பிரிவுகள் உள்ளன.

**2. தேசிய வருவாய் (நாட்டு வருமானம்) என்றால் என்ன?**

ஒரு நாட்டில் ஓர் ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு மற்றும் பணிகளின் மதிப்பைக் குறிப்பதாகும்.

**3. வேலையின்மை என்றால் என்ன?**

வேலை செய்ய தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது வேலையின்மை என்று பெயர்.

**4. உலகத்துவம் என்பதன் பொருள் யாது?**

பன்னாட்டு வாணிபத்தில் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர் நோக்கும் உலகமயமாக்குதல் என்பதாகும்.

**5. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?**

கலப்பு பொருளாதாரம் என்பது தனியார் துறை மற்றும் பொதுத்துறை இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்கு பணியாற்றுவது. இதில் முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் இணைந்த கலவையாகும்.

**6. பொருளாதார அமைப்பு என்றால் என்ன?**

மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பது. - ஏ.ஜே.பிரவுன்

**7. பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கைகள் யாவை?**

1. உற்பத்தி நடவடிக்கை 2.நுகர்வு நடவடிக்கை

**8. பொருளாதார அமைப்பு முறைகள் என்றால் என்ன?**

பொருளாதார அமைப்பு முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும், நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும்.

**9. சிகப்பு நாடா நிலை என்றால் என்ன?**

அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால் அலுவலர்களின் அனுமதி பெற கோப்புகள் மேஜையில் தங்கி இருக்க வாய்ப்பு உள்ளது. இதை சிவப்பு நாடா நிலை என்பர்.

**10. வருவாய் வட்ட ஓட்டம் என்பதன் பொருள் யாது?**

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவது ஆகும். இந்நிறுவனம், குடியிருப்பு அரசாங்கம், மற்றும் நாடுகளுக்கிடையே வருவாய் பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தைக் குறிப்பதாகும்.

## X. ஒரு பத்தி அளவில் விடையளி

**1. முதலாளித்துவத்தின் குறைபாடுகள் யாவை?**

1. முதலாளித்துவத்தில் வருமானம் மற்றும் செல்வம் சிலரது கையில் மட்டும் குவிகிறது. இதனால் நாடுகளில் ஏற்றத்தாழ்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
2. போட்டி விளம்பரங்களினால் இயற்கை வளம் வீணாக்கப்படுகின்றன.
3. முதலாளி, வேலைக்காரர்கள் என இரு பிரிவு ஏற்படவும், வர்க்க போராட்டத்திற்கும் வழிவகுக்கும்.
4. வாணிபச்சுழல் பொருளாதாரத்தில் ஏற்பட்டால் நெருக்கடி நிலை உருவாகும்.
5. அத்தியாவசியமான பொருட்களின் உற்பத்தி ஏற்படாமல் தட்டுப்பாடு ஏற்பட வழிவகுக்கும்.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. சமத்துவ பொருளாதாரத்தின் நன்மைகள் யாவை?**

1. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் குறைவு ஏற்படும். சுரண்டல் ஏற்பட வாய்ப்பு இல்லை.
2. மையத்திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. விரயங்கள் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்படுகின்றது.
3. ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால் பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை.
4. வாணிக சுழலுக்கான ஒரு முடிவு ஏற்படும். உற்பத்தி மற்றும் பகிர்வு அரசாங்கம் முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும்.
5. சமூக நலனின் முன்னேற்றம் காணப்படும். மக்கள் நலன் உயர அரசு உதவி செய்வதால் ஏற்றத்தாழ்வு இல்லாத பொருளாதாரம் அமையும்.

**3. கலப்பு பொருளாதாரத்தின் சிறப்பு பண்புகள் யாவை?**

1. சொத்து, உற்பத்தி சாதனங்களின் உரிமை, தனியார் மற்றும் பொதுத்துறைக்கு சொந்தமாக இருப்பதால் தனியார் துறையும், பொதுத்துறையும் வளங்களை பயன்படுத்த உரிமை பெற்றிருக்கும்.
2. தனியார் துறை, பொதுத்துறை இணைந்து செயல்படுவதால் தனியார் துறை இலாபத்திற்கும், பொதுத்துறை சமூக நலனுக்கும் உற்பத்தி செய்யும்.
3. பொருளாதார திட்டமிடல் தேசிய திட்டமாக இருப்பதால் தனியார் துறையும், பொதுத்துறையும் மதித்து பின்பற்றும்.
4. பொருளாதார அடிப்படை பிரச்சனைகளை விலை இயக்க முறை மற்றும் அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
5. வளங்களின் உரிமை தனியாருக்கு சுதந்திரமாக இருந்தாலும், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.

## XI. ஒரு பக்க அளவில் விடையளி

**1. முதலாளித்துவத்தின் நன்மை தீமைகளை விவரி.**

**முதலாளித்துவத்தின் நன்மைகள்:**

1. **தானாக இயங்குதல் :** அரசாங்கத்தின் எந்த தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.
2. **வளங்களை திறமையாகப் பயன்படுத்துதல் :** அனைத்து வளங்களும் திறமையாகவும், உத்தம அளவிலும் பயன்படுத்தப்படுகிறது.
3. **கடின உழைப்பிற்கு வெகுமதி :** கடின உழைப்பை ஊக்குவிக்கப்படுவதும், திறமையால் அதிக லாபம் பெறுவதும் காணப்படும்.
4. **பொருளாதார முன்னேற்றம் :** முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மிக அதிகமாகும்.
5. **நுகர்வோர் இறையாண்மை:** அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோர்களை திருப்தி செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்கும்.
6. **மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல் :** சேமிப்பு முதலீடு அதிகரித்து மூலதன ஆக்க வீதம் உயர வழிவகுக்கும்.
7. **புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் :** இலாபம் பெறுவது நோக்கமாக இருப்பதால் புதிய முறையைக் கையாண்டு உற்பத்தி உயர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**முதலாளித்துவத்தின் குறைபாடுகள்:**

1. **வருமானம் மற்றும் செல்வச் செறிவு :** வருமானம் மற்றும் செல்வம் சிலரது கையில் மட்டும் குவிந்து வருமான ஏற்றத்தாழ்வு அதிகமாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **வளங்கள் வீணாக்கப்படுதல் :** போட்டி விளம்பரங்களினாலும், பொருட்களின் பிரதிகளினாலும் வளங்கள் வீணாக்கப்படும்.
3. **வகுப்புப் போராட்டம் :** சமுதாயத்தை முதலாளிகள், வேலைக்காரர்கள் என பிரித்து வகுப்பு போராட்டத்திற்கு வழிவகுக்கும்.
4. **வாணிபச் சுழல் :** தடையில்லா சந்தை முறையால் அதிக அளவு பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு நெருக்கடி நிலை ஏற்படும்.
5. **அத்தியாவசியமில்லா பொருட்களின் உற்பத்தி :** இலாபத்தைப் பெறுவதற்காக தீங்கு விளைவிக்கும் பொருட்கள் கூட உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

---

**2. கலப்பு பொருளாதார அமைப்பின் நன்மை தீமைகள் யாவை?**

**கலப்பு பொருளாதார அமைப்பின் நன்மைகள்:**

1. **அதிகவேக பொருளாதார வளர்ச்சி :** இதன் சிறந்த தன்மை அதிவேக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். பொது தேவைகளும் தனியார் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன.
2. **சமமான வளர்ச்சி :** பொருளாதாரத்தில் சமநிலை வளர்ச்சியை கலப்புத்துவம் ஊக்குவிக்கிறது.
3. **வளங்களை சரியாக பயன்படுத்துதல் :** அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை நேரடியாக கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறையை மறைமுகமாக கட்டுப்படுத்தும்.
4. **பொருளாதார சமத்துவம் :** அரசு வருவாய் வரியை வளர் வீத முறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தைக் கொண்டு வருகிறது.
5. **சமூகத்திற்கு சிறப்பு நன்மைகள் :** குறைந்தபட்ச கூலி, பகிர்வு முறை சட்டம், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் மூலம் சமூக நல நடவடிக்கைகளை உருவாக்குகின்றது.

**கலப்பு பொருளாதார அமைப்பின் தீமைகள்:**

1. **ஒருங்கிணைப்பு இல்லாமை :** கலப்புத்துவத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் ஒருங்கிணைப்பு இல்லாததாகும்.
2. **போட்டி மனப்பான்மை :** அரசு மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயலாற்ற வாய்ப்பு குறைவு. இவை இரண்டும் போட்டித் தன்மையுடன்தான் செயல்படும்.
3. **திறமையின்மை :** மந்தமான அதிகார முறை, சிவப்பு நாடா முறை, ஊக்கமின்மை ஆகியவை திறமையின்மை ஏற்பட வாய்ப்பு உண்டு.
4. **தேசியமயமாக்கல் பற்றிய பயம் :** தேசியமயமாக்குதல் என்ற பயம் தனியார் துறையின் வளர்ச்சியையும், புத்தாக்க முயற்சியையும் தடை செய்யும்.
5. **விரிவடையும் சமத்துவமின்மை :** வளங்களின் உரிமை, பரம்பரை சட்டம், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

❖ ❖ ❖



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# மாதிரி வினாத்தாள் – II

## பகுதி – I

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் (20 × 1 = 20)
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. பேரியல் பொருளாதாரம் என்பது _______ பற்றிய படிப்பு
   அ)தனிநபர்கள் ஆ) நிறுவனங்கள் இ) ஒருநாடு ஈ) மொத்தங்கள்
2. திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஒட்ட மாதிரி என்பது
   அ)இருதுறை மாதிரி ஆ) முத்துறைமாதிரி
   இ)நான்குதுறைமாதிரி ஈ) மேற்காணும் அனைத்தும்
3. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் _______ லிருந்து வருகிறது.
   அ)தனியார் துறை ஆ) உள்துறை இ) பொதுதுறை ஈ) எதுவுமில்லை
4. விளைவுத் தேவை (ED)
   அ)Y = C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு ஆ) Y = C + I + S = வெளியீடு
   இ) Y = I + S = வெளியீடு = வேலைவாய்ப்பு ஈ) Y = C + I = வேலைவாய்ப்பு
5. இறுதிநிலை நுகர்வு விருப்பு =
   அ)மொத்த செலவு / மொத்த நுகர்வு ஆ) மொத்த நுகர்வு / மொத்த வருவாய்
   இ) நுகர்வுமாற்றம் / வருவாய் மாற்றம் ஈ) மேற்காணும் எதுமில்லை
6. _______ இடம் பெயர்ந்த பின்னர் வெளியீடு எவ்வளவு மாறுகின்றது என்பதை, 'பெருக்கி' கூறுகிறது.
   அ)வருவாய் ஆ) வெளியீடு இ) முதலீடு ஈ) மொத்தத்தேவை
7. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கு மிடையேயான வித்தியாசம்.
   அ)அஞ்சலக வைப்புகள் ஆ) வங்கியின் கால வைப்புகள்
   இ) வங்கியின் சேமிப்பு வைப்புகள் ஈ) காகிதப்பணம்
8. MV-PT என்ற சமன்பாட்டில், V என்பது
   அ)வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சிவேகம்
   இ) ரொக்கப்பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு
9. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்
   அ)கடன் மற்றும் முன்பணபெருக்கம் ஆ) வருவாய்
   இ)செலவு ஈ) கடன்
10. வங்கி விகிதம் என்பது
    அ)முதல் நிலைபத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது
    ஆ) வட்டிவிகிதம் இ) அந்நியசெலாவணி
    ஈ) வளர்ச்சி விகிதம்
11. சாதகமான வாணிக சூழலில், ஏற்றுமதி, இறக்குமதியை விட ______ ஆக இருக்கும்.
    அ)அதிகமாக ஆ) குறைவாக இ) கிட்டதட்டசமமாக ஈ) சமமாக
12. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை ______ உடன் தொடர்புடையவை.
    அ)வணிகம் சார் சொத்துரிமை (TRIPS) ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்(TRIMS)
    இ) காட் (GATT) ஈ) NAMA
13. வரி, கீழ்காணும் குணங்களைக் கொண்டது
    அ)கட்டாயத்தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை
    இ)வரிமறுப்பு ஒரு குற்றம் ஈ) மேற்காணும் அனைத்தும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2022

**நேரம் : 3.00 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் :

(அ) விலை கோட்பாடு **(ஆ) வருவாய் கோட்பாடு** (இ) அங்காடி கோட்பாடு (ஈ) நுண்ணியல் கோட்பாடு

**2.** தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ____________ ஆகும்.

(அ) முதலாளித்துவ பொருளாதாரம் (ஆ) சமத்துவ பொருளாதாரம்

(இ) உலகமயத்துவ பொருளாதாரம் **(ஈ) கலப்புப் பொருளாதாரம்**

**3.** எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?

(அ) இரண்டு **(ஆ) மூன்று** (இ) ஐந்து (ஈ) நான்கு

**4.** வருமான முறையில் அனைத்துவித ____________ யும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

(அ) வருவாய் (ஆ) வரி (இ) செலவு **(ஈ) வருமானம்**

**5.** மொத்த அளிப்பு =

(அ) C +I + G (ஆ) C + S + G + (X - M)

(இ) C + S + T + (X - M) **(ஈ) C + S + T + Rf**

**6.** மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி :

**(அ) பூஜ்யம்** (ஆ) ஒன்று (இ) இரண்டு (ஈ) நேர்மறை

**7.** MPC - ஐயும் MPS - ஐயும் கூட்டினால் கிடைப்பது :

**(அ) 1** (ஆ) 2 (இ) 0.1 (ஈ) 1.1

**8.** கீழ்க்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) ஜவஹர்லால் நேரு திட்டம் (ii) மக்கள் திட்டம்

(iii) விஸ்வேசுவரய்யா திட்டம் (iv) பாம்பே திட்டம்

(அ) (iv), (iii), (ii), (i) **(ஆ) (iii), (i), (iv), (ii)** (இ) (i), (iv), (iii), (ii) (ஈ) (ii), (i), (iv), (iii)

**9.** பண வீக்கம் என்பது :

**அ) விலைகள் அதிகரிப்பு** (ஆ) விலைகள் குறைதல்

(இ) பணமதிப்பு அதிகரிப்பு (ஈ) விலைகள் மாறாதிருத்தல்

**10.** மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் ____________ இருக்கும்.

(அ) உயர்ந்தபட்சமாக (ஆ) மிக மோசமாக **(இ) மிக குறைந்தபட்சமாக** (ஈ) மிக நல்ல நிலையில்

**11.** நிதி ஆயோக்கின் தலைவராக செயல்படுபவர் :

**(அ) பிரதமர்** (ஆ) குடியரசுத் தலைவர்

(இ) துணைக் குடியரசுத் தலைவர் (ஈ) நிதி அமைச்சர்

**12.** ஏ.டி.எம். (ATM) என்பதன் விரிவாக்கம் :

**(அ) Automated Teller Machine** (ஆ) Adjustment Teller Machine

(இ) Automatic Teller Mechanism (ஈ) Any Time Money



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை :
(அ) வங்கி **(ஆ) அணு ஆற்றல்** (இ) மருந்து உற்பத்தி (ஈ) காப்பீடு

14. வாணிப வீதம் ___________ பற்றி குறிப்பிடுகின்றது.
(அ) பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம் (ஆ) இறக்குமதி வரி விகிதம்
**(இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்** (ஈ) (அ) மற்றும் (இ)

15. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் :
**(அ) தாள் தங்கம்** (ஆ) பங்களவுகள்
(இ) தன்விருப்ப ஏற்றுமதி தடைகள் (ஈ) இவை ஏதுமில்லை

16. GST என்பது ___________ க்கு சமம்.
**(அ) விற்பனை வரி** (ஆ) தொழிற்குழும வரி (இ) வருமான வரி (ஈ) உள்ளாட்சி வரி

17. சூழலியல் என்பது ___________ ன் அடிப்படையாகும்.
(அ) அயனோஸ்பியர் (ஆ) லித்தோஸ்பியர் **(இ) பயோஸ்பியர்** (ஈ) மீசோஸ்பியர்

18. வருவாய் உயர்ந்தால், நுகர்வு :
(அ) குறையும் (ஆ) மாறாது (இ) ஏறி இறங்கும் **(ஈ) உயரும்**

19. மைய வங்கி நாட்டின் ___________ அதிகார அமைப்பு.
**(அ) பணவியல்** (ஆ) நிதியியல் (இ) கூலி (ஈ) தேசிய வருவாய்

20. 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை ___________ ஆகும்.
(அ) ஒருமை (ஆ) பன்மை
**(இ) ஒருமை மற்றும் பன்மை** (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை.

## பகுதி - II

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 -க்கு **கட்டாயம்** விடையளிக்கவும்.

7×2=14

21. "முழு வேலைவாய்ப்பு" - வரையறுக்கவும். **அத்தியாயம் - 3**
22. "பொது வருவாய்" என்றால் என்ன? **அத்தியாயம் - 9**
23. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக. **அத்தியாயம் - 5**
24. கடன் உருவாக்கம் என்றால் என்ன? **அத்தியாயம் - 6**
25. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன? **அத்தியாயம் - 7**
26. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் ஏதேனும் இரண்டு நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடுக. **அத்தியாயம் - 8**
27. சராசரி நுகர்வு நாட்டம் (APC) - வரையறுக்கவும். **அத்தியாயம் - 4**
28. பெருக்கி - வரையறுக்கவும். **அத்தியாயம் - 4**
29. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக. **அத்தியாயம் - 11**
30. பொருளாதார அமைப்புகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது? **அத்தியாயம் - 1**

## பகுதி - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு **கட்டாயம்** விடையளிக்கவும்.

7×3=21

31. முதலாளித்துவத்தின் நன்மைகளைப் பட்டியலிடுக. **அத்தியாயம் - 1**
32. செலவு முறை பற்றி சிறுகுறிப்பு தருக. **அத்தியாயம் - 2**
33. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக. **அத்தியாயம் - 3**
34. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக. **அத்தியாயம் - 4**
35. பண அளிப்பு என்றால் என்ன? **அத்தியாயம் - 5**
36. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக. **அத்தியாயம் - 7**
37. ஐ.எம்.எப். (IMF) -ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை விளக்குக. **அத்தியாயம் - 8**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



38. காற்று மாசுபடுதலின் வகைகளை விளக்குக. அத்தியாயம் - 10

39. நிதி ஆயோக்கின் பணிகள் ஏதேனும் மூன்றினை விளக்குக. அத்தியாயம் - 11

40. விலகல் அளவைகளின் இரு வகைகளைப் பற்றி விளக்குக. அத்தியாயம் - 12

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35

41. (அ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரிக்கவும். அத்தியாயம் - 1

**அல்லது**

(ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக. அத்தியாயம் - 6

42. (அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. அத்தியாயம் - 2

**அல்லது**

(ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக. அத்தியாயம் - 9

43. (அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. அத்தியாயம் - 3

**அல்லது**

(ஆ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக. அத்தியாயம் - 10

44. (அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும். அத்தியாயம் - 5

**அல்லது**

(ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்கவும். அத்தியாயம் - 6

45. (அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவரிக்கவும். அத்தியாயம் - 7

**அல்லது**

(ஆ) உலக வர்த்தக அமைப்பின் பணிகள் மற்றும் இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் அதன் பங்கினை விவரிக்கவும். அத்தியாயம் - 8

46. (அ) கூட்டாட்சி நிதியின் கொள்கைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக. அத்தியாயம் - 9

**அல்லது**

(ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை? அத்தியாயம் - 4

47. (அ) பல்வேறு திட்டமிடல் வகைகளை விவரிக்கவும். அத்தியாயம் - 11

**அல்லது**

(ஆ) பின்வரும் விவரங்களுக்கு திட்ட விலக்கத்தினை காண்க. அத்தியாயம் - 12

25, 15, 23, 42, 27, 25, 23, 25 மற்றும் 20.

❖ ❖ ❖



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

[கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90]

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **20 x 1 = 20**

1. பெருக்கியின் மதிப்பு =
அ) 1 / (1–MPC) ஆ) 1 / MPS இ) 1 / MPC ஈ) (அ) மற்றும் (ஆ)

2. 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) என்ற வார்த்தை ________ ஆக பயன்படுத்தப்படுகிறது.
அ) பன்மை ஆ) ஒருமை மற்றும் பன்மை
இ) ஒருமை ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

3. பொதுக் கடனைத் திரும்பச் செலுத்தும் முறை
அ) மூழ்கும் நிதி ஆ) பகுதியாகச் செலுத்துதல்
இ) கடனை மாற்றுதல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

4. நீடித்த வளர்ச்சி அல்லது வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடையப்பட்டிருக்கும் காலம்:
அ) 2030 ஆ) 2020 இ) 2050 ஈ) 2025

5. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர்
அ) அங்காடி கோட்பாடு ஆ) விலை கோட்பாடு
இ) நுண்ணியல் கோட்பாடு ஈ) வருவாய் கோட்பாடு

6. நிதிக்குழு நிர்ணயம் செய்வது
அ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல ஆ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்
இ) இந்திய அரசின் நிதியினை ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

7. கீழ்க்கண்டவைகளில் எதனை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாகக் கூற முடியாது?
அ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது
ஆ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்
இ) முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது
ஈ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்

8. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை
அ) சந்தைப் பொருட்கள் ஆ) சந்தையிடா பொருட்கள்
இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

9. வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது
அ) அங்காடி விதி ஆ) குறைந்து செல் விளைவு விதி
இ) நுகர்வு விதி ஈ) தேவை விதி

10. 2016 - ல் பணமதிப்பு நீக்கம் _______ மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.
அ) ரூ. 1000 மற்றும் ரூ. 2000 ஆ) ரூ. 200 மற்றும் ரூ. 500
இ) ரூ. 500 மற்றும் ரூ. 1000 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

11. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _______ ஆகும்.
அ) இந்தியா ஆ) ரஷ்யா இ) சீனா ஈ) அமெரிக்கா

12. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்:
அ) National Institute for 'Tomorrow's India
ஆ) National Institute for 'Transport in India



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



இ) National Institution for 'Transforming India

ஈ) National Institute for Trade in India

13. பெனிலக்ஸ் (BENELUX) என்பது ________ ன் வடிவமாகும்.
அ) பொது சந்தை ஆ) தடையற்ற வர்த்தகப் பகுதி
இ) சுங்கவரி ஒன்றியம் ஈ) பொருளாதார ஒன்றியம்

14. MV என்பது ________
அ) வங்கி பண அளிப்பு ஆ) பணத் தேவை
இ) மொத்த பண அளிப்பு ஈ) சட்டபூர்வ பண அளிப்பு

15. தொன்மைக் கோட்பாட்டின்படி வட்டி வீதம் ________ க்கான வெகுமதி.
அ) மூலதனம் ஆ) முதலீடு இ) சேமிப்பு ஈ) தேவை

16. நீண்டகாலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ________ மாற்றமாகும்.
அ) தொழில் ஆ) நிதி இ) கட்டமைப்பு ஈ) வேளாண்மை

17. PQLI என்பது ________ ன் குறியீடு ஆகும்.
அ) பொருளாதார முன்னேற்றம் ஆ) பொருளாதார வளர்ச்சி
இ) பொருளாதார மேம்பாடு ஈ) பொருளாதார நலன்

18. விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது.
அ) ஜுன் 1, 1963 ஆ) ஜுன் 3, 1963 இ) ஜுலை 1, 1963 ஈ) ஜுலை 3, 1963

19. ஐபிஆர்டி ________ என்றும் அழைக்கப்படுகிறது.
அ) ஆசியான் ஆ) பன்னாட்டு பண நிதியம்
இ) பன்னாட்டு நிதி கழகம் ஈ) உலக வங்கி

20. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ________ என அழைக்கிறோம்.
அ) மீட்சி ஆ) பூரிப்பு இ) வணிகச் சுழற்சி ஈ) பின்னிறக்கம்

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக. **அத்தியாயம்-1**
22. GDP குறைப்பான் - இலக்கணம் தருக. **அத்தியாயம்-2**
23. சே விதியில் ஏதேனும் நான்கு எடுகோள்களைப் பட்டியலிடுக. **அத்தியாயம்-3**
24. பெருக்கி - வரையறுக்கவும். **அத்தியாயம்-4**
25. பணத்தின் இலக்கணம் வரைக. **அத்தியாயம்-5**
26. CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக. **அத்தியாயம்-6**
27. அயல்நாட்டு செலுத்து நிலை பற்றி நீவிர் அறிவது யாது? **அத்தியாயம்-7**
28. எங்கு மற்றும் எப்போது சார்க் தலைமை அலுவலகம் துவங்கப்பட்டது? **அத்தியாயம்-8**
29. பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளைப் பட்டியலிடுக. **அத்தியாயம்-11**
30. விவரிப்புப் புள்ளியியலுக்கும் உய்த்துணர்வு புள்ளியியலுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. **அத்தியாயம்-12**

## பகுதி - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**7 x 3 = 21**

31. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக. **அத்தியாயம்-1**
32. காரணி செலவில் NNP - குறிப்பு வரைக. **அத்தியாயம்-2**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



33. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக. அத்தியாயம்-3
34. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக. அத்தியாயம்-4
35. தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பண வீக்கத்தினை விளக்குக. அத்தியாயம்-5
36. நபார்டின் பணிகள் யாவை? அத்தியாயம்-6
37. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக. அத்தியாயம்-7
38. பிரிக்ஸ் மாநாடு 2018 ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக. அத்தியாயம்-8
39. புள்ளியியலின் பணிகள் யாவை? அத்தியாயம்-12
40. சரத்து 269 – ன் படி மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் எவையேனும் மூன்றினைப் பட்டியலிடுக. அத்தியாயம்-9

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) முதலாளித்துவம், சமத்துவம் மற்றும் கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. அத்தியாயம்-1

**(அல்லது)**

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் பல்வேறு முறைகளை விளக்குக. அத்தியாயம்-2

42. அ) வேலையின்மைகளின் வகைகளை விவரிக்கவும். அத்தியாயம்-3

**(அல்லது)**

ஆ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை? அத்தியாயம்-4

43. அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக. அத்தியாயம்-4

**(அல்லது)**

ஆ) தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக. அத்தியாயம்-3

44. அ) பணத்தின் பணிகளை விளக்குக. அத்தியாயம்-5

**(அல்லது)**

ஆ) உள்நாட்டு வாணிகத்திற்கும், பன்னாட்டு வாணிகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். அத்தியாயம்-7

45. அ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரிக்கவும். அத்தியாயம்-11

**(அல்லது)**

ஆ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக. அத்தியாயம்-6

46. அ) GST என்றால் என்ன? அதன் நன்மைகளை விளக்குக. அத்தியாயம்-9

**(அல்லது)**

ஆ) நில மாசுவிற்கான காரணங்கள் யாவை? அதற்கான தீர்வுகளைக் குறிப்பிடுக. அத்தியாயம்-10

47. அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக. அத்தியாயம்-12

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் X - ன் தேவை | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| பொருள் Y - ன் விற்பனை | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**(அல்லது)**

ஆ) பொது நிதியியலின் எல்லைகளை விளக்குக. அத்தியாயம்-9



Kindly send me your study materials to padasalai.net@gmail.com